

நாமக்கல்லில் நடைபெற்ற கட்டிடக்கலை கருத்தரங்கில் பில்டர்ஸ் அசோசியேசன் தலைவர் கணேசன் பேசினார். அருகில் ரவி, நடராஜ், மணி ஆகியோர்.

# நாமக்கல்லில் கட்டிடக்கலை கருத்தரங்கம்

நாமக்கல், பிப்.2-

நாமக்கல் கட்டுனர் வல்லுனர் சங்கம் சார்பில் கட்டிடக் கலை கருத்தரங்கம் நடைபெற்றது.

நாமக்கல் பில்டர்ஸ் அசோசியேசன் சார்பில் கட்டிடக்கலை கருத்தரங்கம் கோல்டன் பேலஸ் ஹோட்டலில் நடைபெற்றது. சங்க தலைவர் கணேசன் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். டெக்னி கெமி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கட்டிடத்தில் ஏற்படும் விரிசல்கள், கான்கிரீட் வெடிப்புகள், தண்ணீர் கசிவு ஆகியவற்றுக்கான காரணங்கள் மற்றும் அவற்றை சரி செய்யும் முறைகள் குறித்து வீடியோ படங்களுடன் விளக்கி பேசினார்.

அசோசியேசன் செயலாளர் நடராஜ், இணை செயலாளர் வெங்கடாசலம், பொருளாளர் மணி, இன்ஜினியர்கள் தேவராஜ், கமலசேகர், சுந்தரராஜ், கான்ட்ராக்டர்கள் செல்வம், கணேசன், முருகேசன், கிரஷர் உரிமையாளர் சுந்தரராஜ் உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.